# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 01.04.2026**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். NC 197/SCIC/2025 in (SA 18927/SCIC/2023)**

திரு.R.சுரேஷ் த/பெ.இராமசாமி — மேல்முறையீட்டாளர்
பிளாட் GA U-93, 3வது பிரதான சாலை
அண்ணா நகர், சென்னை-600 040

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர் ........ பொதுஅதிகார அமைப்பு
அண்ணா நகர் காவல் மாவட்டம்
சென்னை பெருநகரக் காவல்
சென்னை - 600 040.

**ஆணை**

1.இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 01/12/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **“ஆணையத்தின் 11/03/2025 தேதியிட்ட உத்தரவில் 18/10/2024 தேதியிட்ட தகவல்கள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டு, மனுதாரர் அந்தத் தகவல்கள் தவறானவை என்று தெரிவித்ததன் பேரிலேயே திருத்திய / சரியான தகவல்களை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இருப்பினும் ஏற்கனவே 18/10/2024 தேதியிட்டு அனுப்பிய அதே பழைய பதிலை மனுதாரருக்கு அனுப்பியதை, ஆணையம் ஏற்கவில்லை. எனவே, அப்போதைய (01/04/2025 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் Dr.B.Bhutya Sneha Priya, I.P.S., (தற்போது)மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்டம் அவர்கள் மீது, மனுதாரருக்கு முறையான தகவல் அனுப்பத் தவறியமைக்கு சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தினை நேரடியாகவோ**

அல்லது அவரது பிரதிநிதி வாயிலாகவோ 22/01/2026 அன்று ஆணையத்தில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது."

**2. மேற்குறிப்பிட்டவாறு 22/01/2026 அன்று, பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.திருப்பதி, காவல் உதவி ஆணையாளர், அண்ணா நகர் சரகம், பெருநகர சென்னை காவல், சென்னை அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் Dr.B.Bhutya Sneha Priya, I.P.S., (தற்போது)மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்டம் அவர்களிடமிருந்து பெற்ற காரண விளக்கக் கேட்புக் குறிப்பாணைக்கான 20/01/2026 தேதியிட்ட விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்திருந்தார். அவ்விளக்கத்தினை ஆணையம் பரிலிக்கையில், அதனை ஏற்கிறது. எனவே, Dr.B.Bhutya Sneha Priya, I.P.S., (தற்போது) மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், தேனி மாவட்டம் அவர்களின் மீது எவ்வித மேல்நடவடிக்கையும் தேவையில்லை என ஆணையம் முடிவு செய்கிறது. எனவே, இவ்வாணை நிறைவேற்றாமை மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். NC 197/SCIC/2025 in (SA 18927/SCIC/2023)</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
அண்ணா நகர் காவல் மாவட்டம்
சென்னை பெருநகரக் காவல்
சென்னை - 600 040.

2.Dr.B.BHUTYA SNEHA PRIYA, I.P.S.
Formerly Public Information Officer
(Now) SUPERINTENDENT OF POLICE,
DISTRICT POLICE OFFICE
THENI DISTRICT-625 531.

**மேல்முறையீட்டாளர்**
திரு.R.சுரேஷ் த/பெ.இராமசாமி
பிளாட் GA U-93, 3வது பிரதான சாலை
அண்ணா நகர், சென்னை-600 040

நகல்
1.காவல் துறை தலைமை இயக்குநர்
காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகம்
மயிலாப்பூர், சென்னை-600 004.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/PC

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005